உயர் கல்வி பெறுகின்ற மாணவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல், ஏற்கெனவே அங்குள்ள 4 அரசுக் கல்லூரிகளிலும், ஓர் அரசு உதவி பெறும் கல்லூரியிலும் போதுமான இடங்கள் இருக்கின்றன. இந்நிலையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தான் சார்ந்திருக்கின்ற தொகுதியில் ஒரு கல்லூரி வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அவர் சார்ந்திருக்கின்ற தொகுதியிலிருந்து வரப்பெறுகின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கையைக் கண்டறிந்து, எதிர்வருங்காலங்களில் அரசானது அதுபற்றி ஆய்வு செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 235, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

235—

நேரடி கொள்முதல் நிலையம்

***9211—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதியில் நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மேலூர் தொகுதியில் கடந்த இரண்டு கொள்முதல் பருவங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க விவசாயிகளிடமிருந்து கோரிக்கைகள் ஏதும் வரப்பெறாததால், கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவில்லை. எனவே, மேலூர் தொகுதியில் நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க தற்போது அவசியம் ஏற்படவில்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜூன் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய நல்லாசியுடனும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியுடனும் நல்லாட்சி நடத்தி வரும் மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதி, திருவாரூரில் நெல் சேமிப்புக் கிட்டங்கி அமைத்துக் கொடுத்த மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களுக்கும் முதலில் எனது நன்றியை மேலூர் தொகுதி மக்களின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன். மேலூர் தொகுதியில் நிரந்தரமாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க வேண்டுமென மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களை மீண்டும் வலியுறுத்தி, அதற்கு அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு கொள்முதல் பருவத்தில் மதுரை மாவட்டத்தில் திருமங்கலம், உசிலம்பட்டி, வாடிப்பட்டி, மதுரை ஆகிய தாலுகாக்களில் 26 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, அவற்றின் மூலமாக 9,581 மெட்ரிக் டன் அளவிற்கு நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலூர் பகுதியில் நெல் வரத்து இல்லாததனால், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவில்லை. விவசாயிகள் எந்தப் பகுதியில் விவசாயம் செய்திருக்கிறார்கள், எந்த இடத்தில் நெல் வரத்து இருக்குமென மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னால், அந்தப் பகுதியை ஆய்வு செய்து, உடனடியாக அங்கு நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல, நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டிக் கொடுப்பதைப் பொறுத்தவரையில், மாண்புமிகு

அம்மா அவர்களுடைய அரசால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவோடு உறுதியாக நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.

முற்பகல் 10–30

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதி, முல்லைப் பெரியாறு அணையின் கடைமடை விவசாயப் பகுதி ஆகும். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சியில், எங்கு பார்த்தாலும் நல்ல மழை பெய்துகொண்டிருக்கிறது. நல்ல மழை பெய்து, முல்லைப் பெரியாறு அணை நிரம்பியுள்ளதால், கடைமடைப் பகுதியான எனது மேலூர் பகுதிக்கு இந்த வருடம் ஒருபோக சாகுபடிக்குத் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இனிவரும் காலங்களில் எனது மேலூர் தொகுதியில் நெல் சாகுபடி அதிகம் செய்யப்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அங்கு அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 236, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

236—

கூட்டுறவு நூற்பாலை

***26864—திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் தொகுதி, வையாவூர் ஊராட்சி, வையாவூர் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?